2020 யூன் 18

**தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இல: 35/03/023/0001/001**

**சேரல்: அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள்**

**அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாக்குறுதிப் பத்திரங்கள் / உத்தரவாதங்கள் மீது கட்டடவாக்கத் துறைக்கான திரவத்தன்மை வசதி**

**1. அறிமுகம்**

1.1. கொவிட் - 19 தொற்றுநோய்ப் பரவலினால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட கட்டடவாக்கத் துறைக்கு புத்துயிரளிக்கும் தேசிய முக்கியத்துவத்தினை இனங்கண்டு இலங்கை அரசாங்கத்தின் அறிவுறுத்தல்களின் கீழ் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையானது நிதியியல் துறைக்கு பல்வேறு நிவாரண வழிமுறைகளை அறிமுகப்படுத்தியுள்ளது.

1.2. அதற்கமைய, இலங்கை மத்திய வங்கியானது நாணயச் சபையினால் நிர்ணயிக்கப்பட்டவாறான சலுகை வீதத்தில் அத்தகைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தான வாக்குறுதிப் பத்திரமொன்றினைப் பெற்றுக்கொள்வதன் மீது 180 நாட்கள் வரையான காலப்பகுதியொன்றுக்காக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு அவசர திரவத்தன்மை வசதிகளை வழங்குவதற்கு விரும்புகின்றது.

1.3. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் நோக்கம், கொவிட்-19 தொற்றுநோய்ப் பரவலினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட கட்டடவாக்கத் துறைக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் வாக்குறுதிப் பத்திரமொன்றிற்கு/ உத்தரவாதமொன்றிற்கு எதிராக கடன் வசதிகளை வழங்குவதற்கு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளை இயலச்செய்வதாகும்.

1.4. இவ்வசதியானது கடந்த காலங்களில் கொண்டு நடாத்தப்பட்ட ஒப்பந்தங்களின் செலுத்தவேண்டியதாகவுள்ள தொகைக்குச் சமமாக கட்டடவாக்கத் துறை தொழில்முயற்சிகளின் நிதியளித்தல் தேவையின் காரணமாகத் தோன்றுகின்ற திரவத்தன்மை கேள்வியினை நிறைவுசெய்வதற்கு திரவத்தன்மை ஆதரவொன்றாக பணியாற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

**2. வசதியின் முக்கிய அம்சங்கள்**

2.1. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தலானது மேலதிக அறிவித்தல் வரும்வரை 2020 யூன் 18ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்குவரும்.

2.2. அரசாங்கத்தினால் வழங்கப்படும் சொல்லப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்கள்/ உத்தரவாதங்கள் மூலம் பிணையளிக்கப்பட்ட அத்தகைய உரிமம்பெற்ற வங்கிகளிடமிருந்து வாக்குறுதிப் பத்திரங்கள் கிடைக்கப்பெற்றதன் மீது நாணயவிதிச் சட்டத்தின் 83(2) ஆம் பிரிவிற்குட்பட்டு நாணய விதிச் சட்டத்தின் 83(1)(இ)(ii)ஆம் பிரிவின் கீழ் கட்டடவாக்கத் துறை தொழில்முயற்சிகளுக்கு மீளக்கடன் வழங்கப்படுதற்கு 180 நாட்கள் வரையான காலப்பகுதியொன்றுக்காக ஆண்டுக்கு 1 சதவீதம் கொண்ட சலுகை வீதத்தில் மத்திய வங்கியானது உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு கடன் வழங்கலாம் என்பதுடன் உரிமம்பெற்ற

வர்த்தக வங்கிகள் மூலமான அதனையொத்த புதிய வாக்குறுதிப் பத்திரங்களின் சமர்ப்பித்தல் மீது உடனடி புதிய வசதிகள் கிடைக்கப்பெறச் செய்யப்படவுள்ளது.

2.3. இத்திரவத்தன்மை வசதியினை கோரும் பொருட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரமொன்றிற்கு/ உத்தரவாதமொன்றிற்கு எதிராக கடன் பெற்றுள்ள கட்டடவாக்கத் துறை தொழில்முயற்சியாளர்கள் பற்றிய விபரங்களை இலங்கை மத்திய வங்கிக்கு அனுப்புதல் வேண்டும். இணைப்பு I இற்கு அமைவாக உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்கள் மூலம் கையொப்பமிடப்பட்ட முறையாக பூர்த்திசெய்யப்பட்ட படிவத்தின் அச்சுப் பிரதியினை உள்நாட்டு திணைக்களத்தின் பணிப்பாளருக்குச் சமர்ப்பிக்குமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு ஆலோசனை வழங்கப்படுகின்றது. இணைப்பின் மென்பிரதி அச்சுப் பிரதிகள் சமர்ப்பிக்கப்படுகின்ற அதே நேரத்தில் குறித்தொதுக்கப்பட்ட மின்னஞ்சலுக்கு அனுப்பப்படுதல் வேண்டும். உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், இணைப்பு I இல் வழங்கப்பட்ட தகவல்கள் பற்றிய செம்மையினையும் இசைவுத் தன்மையினையும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

2.4. உரிமம்பெற்ற வர்த்தக வங்கியொன்றிடமிருந்து இணைப்பு II இன் படிவத்திலுள்ளவாறு தொடர்புடைய வாக்குறுதிப் பத்திரத்துடன் சேர்த்து இணைப்பு I கிடைக்கப்பெற்றதன் மீது உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளர் தொடர்புடைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வாக்குறுதிப் பத்திரத்தின் முகப்பெறுமதியின் 90 சதவீதத்தினை விஞ்சாத தொகையொன்றினை வரவு வைப்பதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வார்.

2.5. உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள், ஆண்டுக்கு 4 சதவீத்தினை விஞ்சாத வட்டி வீதத்தில் கட்டடவாக்கத் துறை தொழில்முயற்சியாளர்கள் கொடுகடனுக்கான அணுகுவழியினைக் கொண்டிருக்கும் விதத்தில் இவ்வசதிக்கென 3 சதவீதத்தினை விஞ்சாத வட்டி எல்லையொன்றினைப் பேணலாம்.

2.6. உறுதியளிக்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரத்தின்/ உத்தரவாதத்தின் முதிர்வுத் திகதியன்று, இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தொகையினையும் தொடர்புடைய வட்டிக் கூறினையும் என்பதுடன் தொடர்புடைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளின் அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறைமை தீர்ப்பனவுக் கணக்குகளிலிருந்து இலங்கை மத்திய வங்கி, கழித்தல் வேண்டும்.

2.7. இலங்கை மத்திய வங்கியானது வாக்குறுதிப் பத்திரத்தின்/ உத்தரவாதத்தின் முதிர்வுத் திகதிக்கு முன்னர் இரு வாரங்களில் தொடர்புடைய உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கு எதிர்வருகின்ற முதிர்வுகள் பற்றிய விபரங்களை அறிவித்தல் வேண்டும்.

2.8. உறுதியளிக்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்களுக்கு/ உத்தரவாதங்களுக்கு அரசாங்கத்தினால் நிதியளிக்கப்படுகின்ற சந்தர்ப்பத்தில் உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் இலங்கை மத்திய வங்கிக்கு உடனடியாக மீள்கொடுப்பனவு செய்வதற்கு வேண்டப்படுகின்றன.

2.9. இணைப்பு III இற்கமைவாக இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியங்களின் பயன்படுத்தலை இரு வார அடிப்படையில் உரிய திகதியிலிருந்து 3 வேலைநாட்களினுள் ஒவ்வொரு மாதத்தினதும் 15 மற்றும் 30ஆம் திகதிகளில் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடுமாறு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகள் வேண்டப்படுகின்றன.

2.10. வங்கி மேற்பார்வைத் திணைக்களமும் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களமும் இவ்வசதியின் நடைமுறைப்படுத்தலினை இணைந்து மேற்பார்வை செய்யலாம்.

**சீ ஏ அபேசிங்க**
**பணிப்பாளர்/ உள்நாட்டு தொழிற்பாடுகள்**

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் தொடர்பு: **35/03/023/0001/001**

## அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்கள் /உத்தரவாதங்கள் மீது கட்டடவாக்கத் துறைக்கான திரவத்தன்மை வசதி

வங்கியின் பெயர்

| # | ஒப்பந்ததாரர்களினால் கோரப்பட்ட கடன்கள் பற்றிய விபரங்கள் | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வங்கியினால் வழங்ககப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்கள் | | | | | அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்கள்/ உத்தரவாதப் பத்திரங்கள் | | | |
| | தொடர்பு இல. (இணைப்பு II இல் குறிப்பிடப் பட்டவாறு) | வழங்கும் திகதி (திதி/மாமா/ஆஆ) | முதிர்வுத் திகதி (திதி/மாமா/ஆஆ) | பெறுமதி (ரூ) | இலங்கை மத்திய வங்கியிடமிருந்து கோரப்பட்ட தொகை (ரூ) | தொடர்பு இல | ஒப்பந்ததாரரின் பெயர் | பெறுமதி (ரூ) | வழங்கும் திகதி |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |
| 4 | | | | | | | | | |
| 5 | | | | | | | | | |

........................................ திகதி

............................................... சரிபார்க்கப்பட்டது

........................................... அதிகாரமளிக்கப்பட்டது

இதே படிவத்தினை dod@cbsl.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புவதற்கு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள்

| |
|---|
| வாக்குறுதிப் பத்திர இல:<br>.............................................<br>(வங்கியினால் வழங்கப்பட்டது) |

**இணைப்பு II**

## வாக்குறுதிப் பத்திரம்

கொழும்பு

திகதி: 2020/ /

ரூ. ................................

............................................ **(பங்கேற்கும் நிதியியல் நிறுவனத்தின் பெயரும் முகவரியும்)**, இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபைக்கு அல்லது அதன் கட்டளைக்கு இதிலுள்ள திகதியிலிருந்து 180 நாட்களில் ரூபா. ...................................... (ரூ........................) தொகையினை ஆண்டிற்கு ஒரு சதவீதம் கொண்ட வீதத்தில் அத்தொகை மீதான வட்டியுடன் சேர்த்து கொடுப்பனவு செய்வதற்கு வாக்குறுதியளிக்கின்றது.

பங்கேற்கின்ற நிதி நிறுவனத்தின் பெயர்

| |
|---|
| முத்திரை |

அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் கையொப்பமும் இறப்பர் முத்திரையும்

சாட்சிகள்:

1. ...............
2. ...............

| |
|---|
| **அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்** |
| இமவங்கி தொடர்பு இல.: |
| முதிர்வுத் திகதி: |
| வட்டியுடனான மொத்தத் தொகை (%): |

**இணைப்பு III**

தொழிற்பாட்டு அறிவுறுத்தல் தொடர்பு: **35/03/023/0001/001**

## அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரங்கள் /உத்தரவாதங்கள் மீது கட்டடவாக்கத் துறைக்கான திரவத்தன்மை வசதி

வங்கியின் பெயர்

| # | கட்டடவாக்கத் துறைக்கான திரவத்தன்மை வசதியின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட நிதியங்களின் பயன்பாடு பற்றிய இரு வார அறிக்கை | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வங்கியினால் வழங்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரம் | | | அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட வாக்குறுதிப் பத்திரம் | | | | | |
| | தொடர்பு இல. (இணைப்பு II இல் குறிப்பிடப் பட்டவாறு) | முதிர்வுத் திகதி (திதி/மாமா/ஆஆ) | வழங்கப்பட்ட கடன் தொகை (ரூ.) | தொடர்பு இல | ஒப்பந்ததாரரின் பெயர் | முகப் பெறுமதி (ரூ.) | வழங்கும் திகதி (திதி/மாமா/ஆஆ) | முதிர்வுத் திகதி (திதி/மாமா/ஆஆ) | 2020…….. அன்றுள்ளவாறு நிலுவையாக உள்ள கடன் தொகை (ரூ.) |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |
| 4 | | | | | | | | | |
| 5 | | | | | | | | | |

………………………………… திகதி

……………………………………… சரிபார்க்கப்பட்டது

…………………………………. அதிகாரமளிக்கப்பட்டது

இதே படிவத்தினை dod@cbsl.lk என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புவதற்கு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள்